தமிழ்நாடு உயர்நிலை - மேல்நிலைப்பள்ளி
# பட்டதாரி ஆசிரியர் கழகம்
Regd. 758 / 2000
மாநிலக் கழகம்

அலுவலகம் : 3A, அப்துல் ரசாக் தெரு, A2, ஐவரி டவர், சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

நிறுவனத் தலைவர் : **முனைவர் அ. மாயவன்** M.A.,B.L.,M.Ed.,Ex.MLC, சென்னை - 600 078. செல் : 9444123684

*மாநிலத் தலைவர்*
**எஸ். பக்தவச்சலம்,** M.A.M.Ed.,M.Phil.,
அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி,
சென்னை - 600 002.
செல்: 9444334964

*மாநிலப் பொருளாளர்*
**சி.ஜெயக்குமார்,** M.Sc.,B.Ed.,
அரசு உயர்நிலைப் பள்ளி,
அருந்ததியர் காலனி,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 653
செல்: 9943398969

*மாநிலப் பொதுச் செயலாளர்*
**எஸ்.சேதுசெல்வம்,** M.A.,M.Ed.,
போனிப்பாஸ் உயர்நிலைப் பள்ளி
அரியாண்டிபுரம், சிவகங்கை மாவட்டம்.
செல் : 9443610446

இடம் : சென்னை
நாள் : 14.08.2021

பெறுநர்

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள்
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கு,

வணக்கம்.

**ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும்
ஏமாற்றமளிக்கும் புதிய பட்ஜெட்**

தங்கள் தலைமையில் அமைந்துள்ள புதிய அரசின் புதிய பட்ஜெட்டை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 13.08.2021 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் சமர்ப்பித்துள்ளார்.

புதிய அரசின் இந்த புதிய பட்ஜெட் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மிகப்பெரிய ஏமாற்றத்தையே பரிசாக அளித்துள்ளது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது பற்றி ஒரு வார்த்தைகூட பட்ஜெட்டில் இல்லை. அகவிலைப்படி உயர்வு தற்போது இல்லை என்று கைவிரித்துவிட்டார். ஆசிரியர் அரசு ஊழியர்களின் நியாயமான, முக்கியமான எதிர்பார்ப்புகள் அனைத்தையும் இந்த பட்ஜெட் நிராகரித்துள்ளது.

இவைகளை ஆசிரியர், அரசு ஊழியர் சமுதாயம் ஒரு போதும் ஏற்காது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் உடனடியாக தனிக்கவனம் செலுத்திடவேண்டுகிறோம். அகவிலைப்படி (D.A) உயர்வை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு தள்ளிப்போடுவது எவ்வகையிலும் நியாயம் ஆகாது.**

**எனவே பட்ஜெட் விவாதங்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் (தாங்கள்) விதி 110-ஐ பயன்படுததி**

**i. இவ்வாண்டு (2021) ஜூலை முதல் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பையும்,**

**ii. பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது பற்றிய அறிவிப்பையும் சட்டப்பேரவையில் தாங்கள் உடனடியாக அறிவிக்குமாறு தங்களை மிகவும் கனிவுடனும், அன்புடனும் வேண்டுகிறோம்.**

**அதே நேரத்தில், ஆசிரியர், அரசு ஊழியராகப் பணிபுரியும் அனைத்து மகளிர்களுக்கும் மகப்பேறு விடுப்பை 12 மாதங்களாக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பை மனதார, வாழ்த்தி, பாராட்டி, நன்றியுடன் வரவேற்கிறோம்.**

இவண்,

| | | | |
|---|---|---|---|
| **அ. மாயவன்,** Ex. MLC | **S. பக்தவச்சலம்** | **சி. ஜெயக்குமார்** | **S. சேதுசெல்வம்** |
| நிறுவனத் தலைவர் | மாநிலத் தலைவர் | மாநிலப் பொருளாளர் | பொதுச்செயலாளர் |